# <u>RECORD OF DEPOSITION OF WITNESS</u>

## IN THE COURT OF DISTRICT MUNSIF UTHANGARAI
## KRISHNAGIRI DISTRICT

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | **:** | O.S.No. 59 of 2016 | **CNR No.** | **:** | TNKI13-000038-2013 |
| **Name** | **:** | பிரபு | **Father's Name** | **:** | பெருமாள் |
| **Witness for** | **:** | Defendant | **Calling** | **:** | DW1 |
| **Age** | **:** | 34 | **Village** | **:** | ஒந்தியம் |
| **Taluk** | **:** | ஊத்தங்கரை | **District** | **:** | கிருஷ்ணகிரி |
| **Start Time** | **:** | 11.15 AM | **End Time** | **:** | 12.15 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 09.09.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

(1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் பி.ஜி முடித்துள்ளேன், கல்வித்துறையில் வேலை பார்த்து வருகிறேன். வாதி யாரென்றால் எனது சித்தப்பா மகள் ஆவர், எனது அப்பா மூத்தவர் என்றும் வாதியின் அப்பா இளையவர் என்றால் சரிதான். எனது தாத்தா பெயர் என்னவென்றால் பொன்னுசாமி ஆகும். வழக்கு சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் ஆதியில் பொன்னுசாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான், அது அவர் சம்பாதித்த சொத்தாகும், மொத்தமாக 4 ½ ஏக்கர் இருந்தது. பொன்னுசாமி எவ்வாறு சம்பாதித்தார் என்றால் அது அவர் காடுவெட்டி சம்பாதித்ததாகும், எப்போது பெற்றார் என்று தெரியாது. பொன்னுசாமிக்கு பாத்தியப்பட்ட நிலத்தில் எத்தனை கிணறு இருந்தது என்றால் 1 இருந்தது. எவ்வாறு தண்ணீர் இறைக்கப்பட்டது என்றால் முதலில் கவளை இருந்தது பிறகு

ஆயில் என்ஜின் இருந்தது அதன் பிறகு தற்போது மின்மோட்டார் உள்ளது. 2-ம் வாதியின் தந்தை கமலநாதன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது சித்தப்பாவின் பாகத்தை எவ்வாறு எனது தாத்தா பொன்னுசாமி கொடுத்தார் என்றால் தான செட்டில்மென் பத்திரம் மூலம் அவரது அம்மாவை காப்பாளராக வைத்து செய்ததாக என்னிடம் என் தாத்தா சொன்னார். எப்போது தானசெட்டில்மெட் எழுதப்பட்டதென்றால் 1992-ம் ஆண்டு ஆகும். எவ்வளவு சொத்துக்கள் கொடுக்கப்பட்டதென்றால் எனது தாத்தா பொன்னுசாமி சொத்துக்களை 3 பங்குகளாக பிரித்து 1 பங்கை அவர் வைத்துக்கொண்டு, 1 பங்கை எனது அப்பாவிற்கு ஒதுக்கியும் மற்றொரு பங்கை எனது சித்தப்பாவிற்கு ஒதுக்கி கொடுத்தார். மேற்படி பாகமானது எப்போது பிரிக்கப்பட்டதென்றால் எனது சித்தப்பா இறந்த பிறகு தான் பிரிக்கப்பட்டது. 1992-ம் ஆண்டில் பொது கணக்கில் ஆயில் என்ஜின் தான் பயன்படுத்தப்பட்டது என்றால் சரிதான். 1992-ம் ஆண்டு முதல் வாதிக்கு வழங்கப்பட்ட சொத்தை அவர் தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். சுமார் 1 ½ ஏக்கர் நிலமும் மற்றும் **சர்வே எண். 47/2 டி**-ல் கிணறும் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 காண்பிக்கப்பட்டு வா.சா.ஆ. 1 ஆவணத்தின் படி கிணற்றில் மற்றும் 6HP ஆயில் என்ஜின், பம்பு, பைப் உட்பட இவைகளில் பொதுவில் 3 ல் 1 பங்கு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் வழி பாத்தியமும் வாய்க்கால் பாத்தியமும் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், 4 ½ ஏக்கர் சொத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. எனது தாத்தா பொன்னுசாமி அவரது 4 ½ ஏக்கர் நிலத்தை எவ்வாறு அடைந்து அனுபவித்து வந்தார் என்றால் மற்றவர்கள் நிலத்தின் வழியாகதான் சென்றார். எவ்வளவு தூரம் அவ்வாறு அவரது

வீட்டிலிருந்து நிலத்திற்கு செல்வார் என்றால் கிழக்கு மேற்காக சுமார் ½ கி.மீ. இருக்கும். மேற்படி பாதையானது 10, 15 உரிமையாளர்கள் நிலத்தை தாண்டிதான் செல்ல முடியுமா என்றால் இல்லை, 2 பங்காளிகள் நிலத்தினை கடந்து சென்றாலே போக முடியும் ஆனால் அதில் பாதை இல்லை.

(2) 1992–ல் பத்திரம் எழுதிய பிறகு மீத இரண்டு பங்கை எனது தாத்தாவும் எனது அப்பாவும் தனித்தனியாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். எனது தாத்தா அவருடைய பாகத்தையும் எனது அப்பாவின் பாகத்தையும் சேர்த்து எனக்கு எழுதிவைத்தாரா என்றால் எனக்கு தெரியாது. வேறு ஏதாவது நிலங்களை எழுதிவைக்காமல் இறந்தாரா என்றால் இல்லை. **வா.சா.ஆ. 4** காண்பிக்கப்பட்டு, எனது அப்பாவிற்கு 3 ல் 2 பங்கு பாத்தியம், டெப்பாசிட்டிலும் மோட்டாரிலும் எழுதிக்கொடுத்தார் என்றால் ஆயில் என்ஜினை மட்டும் தான் எழுதிக்கொடுத்தார். எனது அப்பாவிற்கு எனது தாத்தா எழுதிக் கொடுத்த விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ. 4 ஆவணத்தின்படி **சர்வே எண். 47/2டி1** நிலத்தில் கிணறு பாக நிலத்தில் 3ல் 2 பங்கும், கிணற்றில் உள்ள 5 எச்பி மின் மோட்டார் மற்றும் டெப்பாசிட் தொகையில் 3ல் 2 பாகமும் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் ஆயில் என்ஜின் தான் கொடுக்கப்பட்டது மின் மோட்டார் எனது தந்தை வாங்கியதாகும். எங்களது எதிர்வழக்குரையில் எனது தந்தை பெயருக்கு எழுதிக் கொடுத்த நிலங்கள் பற்றியும் கிணறு மற்றும் மோட்டாரில் கொடுத்த பங்கினைப்பற்றி சொல்லியுள்ளேனா என்றால் கிணறு பாகம் பற்றி சொல்லியுள்ளேன். எதிர் வழக்குரையில் மின்மோட்டார் பற்றியும் டெப்பாசிட் தொகை பற்றியும்

சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 2004–ம் ஆண்டில் பொன்னுசாமி எனது சித்தப்பா கொடுத்த 1/3 பாகத்தை தவிர்த்து 2/3 பாகமானது கிணற்றிலும், டெப்பாசிட்டிலும், மின்மோட்டாரில் எனது அப்பாவிற்கு கொடுத்தார் என்றால் சரியல்ல, கிணற்றில் மட்டும் தான் கொடுத்தார். 2004–ம் ஆண்டு கிரைய பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2004–ம் ஆண்டு எனது தாத்தா எனது அப்பாவிற்கு பத்திரம் மூலம் 2ல் 3 பங்கு மின்மோட்டாரை எழுதிக்கொடுத்துள்ளார் எனறால் இல்லை, கிணற்றில்தான் எழுதிக்கொடுத்தார். கிரையப் பத்திரத்தில் மின் இணைப்பு எண் 34 என்று குறிப்பிடப்பட்டுள்ளது தவறு என்றும் அதன் சரியான மின் இணைப்பு எண் 145 என்றால் சரிதான். மேற்படி மின் இணைப்பு எண்ணை சரிசெய்ய 02.12.2016–ம் ஆண்டு பிழைதிருத்த பத்திரம் எழுதி பதிவு செய்யப்பட்டதென்றால் சரிதான். **02.12.2016 தேதியிட்ட பிழைதிருத்த பத்திரம் – சான்றிட்ட நகல் – வா.சா.ஆ. 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி பிழைதிருத்த பத்திரம் இந்த வழக்கிற்கு பின்னிட்டுதான் ஏற்படுத்தப்பட்டதென்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் மேற்படி பிழைதிருத்த பத்திரம் என்றால் சரிதான். மேற்படி பிழைதிருத்த பத்திரத்திலும் **சர்வே எண். 47/2டி1** நிலத்தில் கிணறு பாகம் அடிநிலம், மின்மோட்டார் சர்விஸ் எண் 145ல், டெப்பாசிட் தொகை இதில் 3ல் 2 பாகம் என்று எழுதியுள்ளார் என்றால் சரிதான், மோட்டாரின் முழு உரிமையும் எங்களுக்கே என்று எழுதிக்கொடுத்துள்ளார். இந்த பிழைதிருத்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன்.

(3) குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

G AMAR ANAND

District Munsif
Digitally signed by G AMAR ANAND
Location: Uthangarai

District Munsif
Uthangarai